بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 26.08.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

**தஷஹ்ஹுத், தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

பிரிட்டன் ஜலஸாவின் இரண்டாவது நாளன்று அல்லாஹ்வின் அருள் மழைகள் பற்றி கூறப்படும். அதில் பல்வேறு துறைகளின் புள்ளி விவரங்கள் எடுத்துரைக்கப்படும். ஜமாஅத்தின் முன்னேற்றத்தைப் பற்றி கூறப்படும். இந்த புள்ளி விவரங்கள் பற்றிய சம்பவங்களையும் நான் எடுத்துரைப்பதுண்டு. ஆனால் ஒன்றரை மணி நேரம் அல்லது இரண்டரை மணி நேரத்தில் இந்த புள்ளி விவரங்களின் விளக்கத்தை எடுத்துரைக்க முடியாது. அதே போன்று சம்பங்களையும் எடுத்துரைக்க முடிவதில்லை. நான் எடுத்துரைப்பதற்கு கொண்டு வரும் குறிப்புகளும் அப்படியே திரும்பி வந்து விடுகின்றன. இந்த புள்ளி விவரங்களை தஹ்ரீகே ஜதீது துறையினர் வெளியிட தொடங்கியுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கின்ற புள்ளி விவரங்களின் விளக்கங்கள் புத்தக வடிவில் வெளியாகின்றது. சம்பவங்களைப் பொருத்தவரையில் நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் அதனை எடுத்துரைத்து வருகின்றேன். இன்றும் கூட நான் அவற்றிலிருந்து சில சம்பவங்களை எடுத்துரைப்பேன். அல்லாஹ் உலகின் பல்வேறு நாடுகளில் வசிக்கக்கூடியவர்களின் உள்ளங்களில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்துகின்றான் என்பதும் அதிலிருந்து தெரிய வருகின்றது. சிலருக்கு கனவுகள் மூலமாக அஹ்மதிய்யத்தின் உண்மையை அறிவிக்கின்றான். சில இடங்களில் புத்தகங்களும், பிரசுரங்களும் தப்லீக்கிற்கு காரணமாக அமைந்து விடுகின்றன. சில இடங்களில் அஹ்மதிய்யத்திற்கு எதிரான பிரச்சாரம் அஹ்மதிய்யத் பரவுவதில் உரமாக செயல்படுகின்றது. சில இடங்களில் அஹ்மதிகளின் நல்லொழுக்கம் பிறரின் கவனத்தை அஹ்மதிய்யத்தின் பக்கம் ஈர்க்கின்றது. இன்னும் பல சம்பவங்கள் உள்ளன. அவை தொலைதூர நாடுகளில் வசிப்பவரிகளின் அஹ்மதிய்யத் மீதான ஆச்சரிமளிக்கச் செய்யும் ஈமான் மற்றும் உறுதிப்பாட்டின் காட்சியை நமக்கு விளக்குகின்றன. குழந்தைகளின் தர்பிய்யத்தும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதன் மூலம் அல்லது அஹ்மதிகளின் தோழமையில் இருப்பதனால் குழந்தைகளிடம் வியத்தகு மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதனை அந்நியர்களும் கூட உணர்கின்றனர்.

சுருக்கம் என்னவென்றால், ஒருவர் நீதியின் கண் கொண்டு பார்த்தால் நாம் ஒரு அமைப்பின் கீழ் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்கின்றோம். ஆனால் நாம் செய்கின்ற முயற்சிகளை விட பன்மடங்கு கனிகளை அல்லாஹ் நமக்கு தருகின்றான் என்பது தெரிய வரும். அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் என்பது நமது முயற்சிகள் அல்லது நம்முடைய காரணிகளால் அல்ல என்பதை அவர் நன்கறிவார். மாறாக, அல்லாஹ்வின் அருட்களாலேயே அது நடக்கின்றது. இதனை நான் மேலும் முன்னுரையாக எடுத்துரைப்பதற்கு பகரமாக சில சம்பங்களின் பக்கம் வருகின்றேன்.

கிலினாகிரியின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: ஜமாஅத் அறிமுகத்தை உள்ளடக்கிய இரண்டு பக்கங்களைக் கொண்ட பிரசுரம் அல்லாஹ்வின் அருளால் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சென்றடைந்திருக்கின்றது. எங்களுக்கு நாட்டின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. நாங்கள் எங்களுடைய முன்னோரிடமிருந்து இமாம் மஹ்தியின் வருகையைப் பற்றிய செய்தியை கேள்விப்பட்டிருக்கின்றோம். இப்போது உங்களுடைய இந்த பிரசுரத்தைப் பார்த்து நாங்கள் உங்களை சந்திக்க விரும்புகின்றோம். முஹம்மதிய்ய சமுதாயத்திற்கு சீர்திருத்தவாதி அவசியப்படுகின்ற காலகட்டம் தற்போது வந்து விட்டது என்று அவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு அல்லாஹ்வின் அருளால் ஏராளமான மக்களின் தொடர்பு கிடைத்திருக்கின்றது. மேலும் அந்த மக்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றனர். பிரசுரம் என்பது முகவரியை அறிவித்துக் கொடுப்பதற்கு ஒரு வழிமுறையாக உள்ளது. ஆனால் அல்லாஹ் உள்ளங்களை தயார்படுத்தியிருந்தான். இந்த காலம் ஒரு இமாம் மஹ்தி மற்றும் ஒரு சீர்திருத்தவாதியின் காலம் என்பதை அறிவுடைய மக்கள் உணர்கின்றனர். ஆக, இது அல்லாஹ்வின் பணியாகும். இதில் எந்த மனித முயற்சியும் பங்கும் இல்லை.

அடுத்து தன்ஸானியா என்ற ஒரு நாடு உள்ளது. முதலில் மேற்கு ஆப்ரிக்காவின் சம்பவம் கூறப்பட்டது. இப்போது இந்த சம்பவம் கிழக்கு ஆஃப்ரிக்காவின் சம்பவமாகும். டடோமா என்ற நகரத்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஒரு திருக்குர்ஆன் கண்காட்சியின் போது ஒரு பெண்மணி நமது அரங்கிற்கு வந்திருந்தார். இது முஸ்லிம்களின் அரங்கமா? என மிக ஆச்சரியத்துடன் கேட்டார். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக புத்தங்களைப் பற்றிய அறிமுகங்களை கேட்டு பெற்றுக் கொண்டார். கடைசியில், கிருத்தவத்தைப் பற்றிய விஷயங்களை உள்ளடக்கிய ஒரு புத்தகம் ஒன்றை வாங்கினார். பின்னர் ஒரு நாள் அதே பெண்மணி தனது கணவருடன் அதே அரங்கிற்கு மீண்டும் வந்தார். அன்று இருவரும் இராணுவ சீருடையில் வந்திருந்தனர். இருவரும் இராணுவத்தில் பணியாற்றுபவர்கள். அந்த பெண்மணி கூறினார். இவர் எனது கணவராவார். எங்களுக்கு திருமணமாகி பல ஆண்டுகள் ஆகின்றன. நான் முஸ்லிமாவேன். இவரோ கிருத்தவர் ஆவார். நான் நீண்ட காலமாக இவருக்கு இஸ்லாத்தின் போதனைகளை கூற முயற்சி செய்து வந்தேன். ஆனால் இவருக்கு இஸ்லாத்தைப் பற்றி கூறும் வகையிலான புத்தகங்கள் எங்கிருந்தும் எனக்கு கிடைக்கவில்லை. நேற்று நான் உங்களுடைய அரங்கிற்கு வந்த போது இன்று நான் சரியான இடத்திற்கு வந்துள்ளேன் என்று உணர்ந்தேன். எனவே நான் ஒரு புத்தகத்தை உங்களிடமிருந்து வாங்கிச் சென்று அவருக்கு படிக்கக் கொடுத்தேன். அதன் மூலம் அவருடைய பல கேள்விகளுக்கு விடை கிடைத்தன. எஞ்சியுள்ள கேள்விகள் உங்களிடம் பேசுவதன் மூலமாக அவருக்கு பதில் கிடைத்து விடும் என்று நான் நம்புகின்றேன்.

இவ்வாறு நீண்ட நேரம் அந்த முபல்லிக்கிடம் அவர் உரையாடினார். இறுதியில் அவருடைய கணவர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வதற்கு தயாராகி விட்டார். அவ்விருவரும் பைஅத் செய்து உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தில் பைஅத் செய்து நுழைந்தனர். தனது கணவரை எப்படியாவது முஸ்லிமாக்கி விட வேண்டும் என்ற அவருக்கு இருந்து உண்மையான துடிப்பு அல்லாஹ்வின் அருளை ஈர்த்தது. அதன் மூலம் தற்செயலாக அந்த பெண்மணி நமது அரங்கிற்கு வந்தார். பின்னர் இருவருக்கும் அல்லாஹ் உண்மை இஸ்லாத்தின் மடியில் வந்து அமர்வதற்கான பாக்கியத்தை நல்கினான். பிரசுரம் மூலமாக அல்லது தப்லீக் மூலமாக ஆஃப்ரிக்காவில் மட்டுமே தூதுச் செய்து சென்றடைகின்றது அல்லது மக்கள் தேடுதலில் உள்ளனர் என்பதல்ல.

Harsfield –ன் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார். இங்கும் ஏராளமான மக்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிய விரும்புகின்றனர். வான்ஸிலா டவுணில் தப்லீக் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அதன் மூலம் அங்கு தொடர்பு கிடைத்தது. அவர் கூறுகின்றார். சிறிது காலத்திற்குப் பிறகு 50 ற்கும் மேற்பட்ட ஆங்கிலேய ஆண்களும் பெண்களும் இடம் பெயர்ந்து நமது பள்ளிவாசலுக்கு வந்தனர். இஸ்லாத்தைப் பற்றிய தகவல்களை பெறுவதே அவர்களின் வருகையின் நோக்கமாக இருந்தது. ஒன்றரை மணி நேரம் அந்த குழுவுடன் மஸ்ஜிதில் தப்லீக் நிகழ்ச்சி நடந்தது. இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. அதன் பிறகு கேள்வி பதில் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மக்கள் சுயமாக இங்கு வந்ததும் சுயமாக இஸ்லாத்தின் பக்கம் கவனம் செலுத்தியதும் எதனை காட்டுகின்றது என்றால் அல்லாஹ் இப்போது மக்களின் உள்ளங்களை இஸ்லாத்தின் பக்கம் திருப்பி இருக்கின்றான். ஒரு பக்கம் இஸ்லாத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது. மற்றொரு பக்கம் முஸ்லிம்களே இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். அதன் விளைவாக முஸ்லிம் அல்லாத மக்கள் இஸ்லாத்தைப் பற்றி தப்பெண்ணம் கொள்ளத் தொடங்கி விடுகின்றனர். ஆனால் மற்றொரு பக்கமோ மக்களின் கவனம் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்படும் அளவிற்கு அல்லாஹ் தானே காற்றை வீசச் செய்கின்றான். உண்மையான இஸ்லாத்தை புரிந்து கொள்ளும் வகையில் அந்த காற்றை வீசச் செய்கின்றான்.

அடுத்து தொலை தூரத்தில் வசிக்கக்கூடியவர்களின் ஈமானை அல்லாஹ் எவ்வாறு வலுப்படுத்துகின்றான் என்பதை நாம் பார்க்கின்றோம். மேலும் அவர்களிடம் தியாக உணர்வையும் அல்லாஹ் ஏற்படுத்தி இருக்கின்றான். பெனின் நாட்டின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அலாடா ரீஜனை சார்ந்த சோக்கோவில் இந்த வருடம் பிப்ரவரியில் ஒரு மஸ்ஜிது கட்டப்பட்டது. மஸ்ஜிது கட்டுமானப் பணிகளில் ஜமாஅத் உறுப்பினர்கள் மிகவும் பற்றுடனும், அன்புடனும் பங்கு பெற்றனர். பல நிலைகளில் தனது நேரத்தையும், பொருளையும் தியாகம் செய்து கட்டுமானத் தொழிலாளிகளுக்கு உதவியும் செய்து வந்தனர். பெண்கள் கூட கட்டுமானப் பணிகளுக்கு தேவையான தண்ணீரை தொலைதூர இடங்களிலிருந்து கொண்டு வந்தனர். இவ்வாறு மஸ்ஜிது கட்டுமானப் பணிகளில் பங்கு பெற்று வந்தனர்.கிராமத்தின் தலைவர் கூறினார். இந்த பள்ளிவாசல் இந்த பகுதி மக்களுக்கு அமைதி நிறைந்த இஸ்லாத்தை எடுத்துரைக்கக் கூடியதாகும்.

அதே போன்று அந்த பகுதியைச் சார்ந்த சீஃப் கூறினார். இந்த பள்ளிவாசல் அலாடா ரீஜனுக்கு ஒளி வழங்கக்கூடிய மினாராவாகவும் வழிகாட்டியாகவும் உள்ளது. இந்த பகுதி மக்களின் பெரும்பாலார் சிலை வணக்கத்தை போதிக்கும் மார்க்கத்தோடு தொடர்புடையவர்கள் ஆவர்.

அங்குள்ள சீஃப் கூறினார். நானும் ஒரு நேரத்தில் சிலை வணங்கியாக இருந்தேன். ஆனால் இன்று அஹ்மதிய்யத்தின் மூலமாக ஏக இறைவனை வணங்கக் கூடியவனாக ஆகி விட்டேன். அந்த மக்களை நோக்கி அவர் கூறினார். இன்று நான் உங்களுக்கு உறுதி அளிக்கின்றேன். இந்த ஜமாஅத் உண்மை மற்றும் அன்பின் முழு உருவமாகும். அஹ்மதிய்யத்தின் மூலமாகவே நான் இதனை அறிந்துள்ளேன். அதாவது நான் ஒரு அரசன் தான். ஆனால் எனக்கு மேல் ஒரு பேரரசன் இருக்கின்றான். அவனை வணங்குவது நமது கடமையாகும். இந்த எண்ணங்களை அல்லாஹ்வே உள்ளங்களில் ஏற்படுத்துகின்றான். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியும் உண்மையாகும். இஸ்லாத்தின் போதனையும் உண்மையாகும். இந்த உண்மையான செய்தியைத் தான் அஹ்மதிய்யா ஜமாஅத் முழு உலகிலும் பரப்புகின்றது. இந்த போதனையின் மூலமாகவே இணை வைக்கும் மக்கள் ஏகத்துவவாதிகளாக ஆகி வருகின்றனர்.

அந்த பகுதியின் மற்றொரு அதிகாரி இவ்வாறு கூறினார். இந்த பகுதியில் இஸ்லாத்தின் பிரச்சாரம் நடந்த போதும் மக்களின் கவனம் இஸ்லாத்தின் பக்கமும் அஹ்மதிய்யத்தின் பக்கமும் ஏற்பட்ட போதும் பலர் என்னிடம் வந்து புகார் செய்தனர். அவர்கள் இஸ்லாத்தைக் கண்டு அஞ்சினர். ஜமாஅத்திற்கு எதிரான சிந்தனை கொண்டவர்களாக இருந்தனர். இவர்கள் மற்ற தீவிரவாத அமைப்புகளைப் போன்று கொலை செய்து நமது குழந்தைகளை கடத்திச் செல்வதற்காக வந்துள்ளனர். எனவே அந்த பகுதியின் அதிகாரி கூறுகிறார். நான் அந்த பகுதியின் இளைஞர்களுக்கு டியூட்டி கொடுத்தேன். இரவு நேரத்தில் அந்த பகுதியிலுள்ள அஹ்மதிகளிடம் சென்று அவர்களின் நடவடிக்கைகளை அவர்கள் ஆய்வு செய்தனர். ஜமாஅத் ஏதாவது சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபடுகின்றதா என்பதை ஆராய்ந்தனர். அதிகமான ஆராய்ச்சிகளுக்குப் பிறகு நாங்கள் மன நிறைவு அடைந்தோம். அமைதியை நிலைநாட்டுவது மட்டுமே ஜமாஅத்தின் நோக்கமாக இருந்தது.

பெனின் நாட்டைச் சேர்ந்த இன்னொரு முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்: ரேடியோ தப்லீக் நிகழ்ச்சியின் போது ஒரு நண்பரின் தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் தனது கிராமத்தில் தப்லீக்கிற்கு வரும்படி அழைத்தார். அவர் தனது முகவரியை கூறிக் கொண்டிருக்கும் போதே இணைப்பு தடைபட்டது. முழுமையாக பேச முடியாமல் போனது. நாங்கள் தப்லீக் செய்வதற்காக சிண்டு போத்தா என்ற ஊரை சென்றடைந்தோம். ஒரு நபர் எங்களைக் கண்டு எழுந்து நின்றார். எல்லா மக்களிடம் விரைவாக

இங்கு வாருங்கள் என்று கூறினார். எவர்களின் குரலை நாம் தினமும் ரேடியோவில் கேட்டு வந்துள்ளோமோ அவர்கள் நேரில் நமது ஊருக்கு வந்துள்ளனர் என்று கூறினார்.

இவ்வாறு அங்கு செய்யப்பட்ட தப்லீக்கின் விளைவாக 200 க்கும் மேற்பட்ட மக்கள் பைஅத் செய்தனர். அங்கு ஒரு புதிய ஜமாஅத் நிலைநாட்டப்பட்டது. பைஅத் செய்து சில நாட்களே ஆன நிலையில் அவர்களின் ஈமானிலுள்ள உறுதிப்பாட்டின் நிலையை கேளுங்கள்.

பைஅத் செய்த இரண்டு நாட்களுக்குப் பிறகு கடுமையான புயல் மற்றும் மழையின் காரணமாக அந்த எரிக் சாஹிப் என்ற அஹ்மதி நண்பரின் வீட்டு சுவர் இடிந்து விழுந்தது. அந்த இடிபாடுகளில் சிக்கி அவரின் எட்டு மாத குழந்தை உயிரிழந்தது. அது இணை வைப்பவர்களின் கிராமமாக இருந்தது. அதற்கு அந்த கிராமத்திலுள்ள இணை வைப்பவர்கள் கூறினார்கள். பாருங்கள் ! நீங்கள் இப்போது இந்த ஜமாஅத்தின் மீது ஈமான் கொண்டுள்ளீர்கள். இப்போதே துன்பங்கள் வரத் தொடங்கி விட்டன. அதற்கு அந்த புதிய அஹ்மதி கூறினார். நான் கண்ட உண்மையின் மீது நான் ஈமான் கொண்டுள்ளேன். மற்றபடி பிள்ளைகள் மற்றும் செல்வங்கள் எல்லாம் வழங்குவது அல்லாஹ் தான். அவனே திரும்பவும் எடுத்துக் கொள்கின்றான். என்ன ஆனாலும் நான் இந்த ஜமாஅத்திலிருந்து ஒரு போதும் பின்வாங்க மாட்டேன். நான் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றேன். நான் அஹ்மதியாவேன். மேலும் இன்ஷா அல்லாஹ் நான் மரணிக்கும் வரை அஹ்மதியாகவே இருப்பேன். இது தான் ஈமானிய உறுதிப்பாடு மற்றும் ஏகத்துவத்தில் நிலைநிற்பதாகும்.

இந்நிலையை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்துகின்றான். மேலும் அந்த நபர் தனது சொந்த நிலத்தின் ஒரு பகுதியை ஜமாஅத் சென்டர் கட்டுவதற்காக கொடுத்து விட்டார். இன்னும் சொல்லப்போனால், அவரே உடனடியாக ஒரு சிறிய கூடாரத்தை அமைத்தும் கொடுத்து விட்டார். திருக்குர்ஆன் வகுப்புகள் நடைபெற வேண்டும் என்பதற்காக அந்த ஏற்பாட்டைச் செய்தார்.

அல்லாஹ் எவ்வாறு அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான வழிகளை திறந்து தருகின்றான் என்பது தொடர்பான ஒரு சம்பவம். தன்ஸானியா நாட்டின் ஒரு முபல்லிக் எழுதுகின்றார். ஷாங்கா பகுதியினுடைய ஒரு கிராமத்தில் இந்த வருடம் ஒரு புதிய ஜமாஅத் நிறுவப்பட்டது. அதே பகுதியிலுள்ள மற்றொரு கிராமத்தில் அங்கு தப்லீக் நிகழ்ச்சி நடந்து வந்தது. அப்போது திபு என்ற கிராமத்திலிருந்தும் ஒரு பெண்மணி வந்திருந்தார். நீங்கள் எங்கள் கிராமத்திற்கும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்து வாருங்கள் என்று அழைப்பு விடுத்தார். ஏனென்றால் அங்கு முஸ்லிம்களும் இருக்கின்றனர். ஒரு பள்ளிவாசலும் இருக்கின்றது. ஆனால் நீங்கள் எடுத்துரைக்கின்ற இஸ்லாம் அவர்கள் கூறுகின்ற இஸ்லாத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். அந்த வகையில் நமது முஅல்லிம்கள் அந்த கிராமத்திற்கு சென்று தப்லீக் செய்த போது முதல் நாளன்றே பள்ளிவாசலின் இமாமையும் சேர்த்து 93 பேர் ஜமாஅத்தில் இணைந்து விட்டனர். இந்த மக்கள் அஹ்மதிகளாகி விட்டனர் என்ற செய்தி சுன்னத் ஜமாஅத்தைச் சார்ந்த ஆலிமுக்கு தெரிய வந்தது. அவர் உடனே அந்த கிராமத்திற்கு வந்தார். அவர் கூறினார். நீங்கள் வழிகெட்டு விட்டீர்கள். இந்த மக்கள் முஸ்லிம்களே கிடையாது. அதற்கு புதிய அஹ்மதி ஒருவர் இவ்வாறு கூறினார்.

நாங்கள் சிந்தித்து ஆராய்ந்தே அஹ்மதியத்தை ஒப்புக் கொண்டிருக்கின்றோம். இதுவே உண்மையான இஸ்லாம் ஆகும். எனவே உம்முடைய எந்த கூற்றையும் நாங்கள் செவியேற்க மாட்டோம். மக்கள் மவ்லவியின் பேச்சைக் கேட்கவில்லை. அவர்களின் பெரிய இமாம் உள்ளூர் இமாமை அலுவலகத்தில் வந்து தம்மை சந்திக்கும்படி கூறினார். ஆனால் பைஅத் செய்திருந்த உள்ளூர் இமாம் வரமுடியாது என்று கூறி மறுத்து விட்டார். அல்லாஹ்வின் அருளினால் புதிதாக பைஅத் செய்து வந்த அஹ்மதிகள் அனைவரும் ஜமாஅத் தொடர்பில் வலுவடைந்து வருகின்றனர். சந்தா அமைப்பிலும் இணைந்துள்ளனர். அந்த மக்கள் ஏழைகள் தான். பயணங்களுக்கு தேவையான பணத்தை கூட அவர்களால் ஒன்று சேர்க்க முடியாது. ஆனால் தலைமையகத்திற்கு தமது பகுதியிலிருந்து ஷூராவிற்கு பிரதிநிதியை அனுப்புவதற்கு சந்தா வசூல் செய்து தலைமையகம் அனுப்பி வைத்தனர். இந்த புதிய அஹ்மதிகளின் மூலமாகவே அருகிலுள்ள இரண்டு கிராமங்களிலும் ஜமாஅத் புதிதாக நிறுவப்பட்டுள்ளது. அங்கும் ஜமாஅத் அமைப்பும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

பெனினின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: கொய்கோ ரீஜனில் ஒரு கிராமத்தில் நமது பள்ளிவாசல் ஒன்று கட்டப்பட்டது. அந்த பகுதியில் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜமாஅத் நிறுவப்பட்டது. மேலும் 245 பேர் ஜமாஅத்தில் இணைந்தனர். ஜமாஅத்தில் இணைந்தது முதல் அவர்களுக்கு தொடர்ந்து எதிர்ப்பு இருந்து வருகின்றது. உறவினர்கள் புறமிருந்தும், கிராமத்தின் இமாம் புறமிருந்தும் எதிர்ப்பு வந்தது. அந்த கிராமத்தின் இமாம் அக்கம் பக்கத்திலுள்ள இமாம்களை ஒன்று கூட்டி ஜமாஅத்திற்கெதிராக மிகப்பெரிய கூட்டத்தை கூட்டினார். ஆனால் அந்த பகுதியின் ஜமாஅத் உறுப்பினர்கள் உறுதியுடன் ஜமாஅத்தில் நிலை நின்றனர். நடப்பு ஆண்டில் அங்கு பள்ளிவாசல் கட்ட தொடங்கிய போது அஹ்மதியல்லாத மவ்லவி வெளிப்படையில் மிகக் கடுமையாக ஜமாஅத்தை எதிர்த்தார். அஹ்மதிகளின் பள்ளிவாசலில் சென்று தொழுவதை விட தேவாலயங்களில் சென்று நீங்கள் தொழுவதே சிறந்ததாகும் என்று அவர் கூறினார். பள்ளிவாசலைக் கட்டி வந்த வந்த மேஸ்த்திரியை மிரட்டினர். பள்ளிவாசலை கட்டிக் கொடுக்கக் கூடாது என்று கூறினர். ஆனால் இந்த அனைத்து மிரட்டல்கள் மற்றும் தடைகளுக்கிடையில் ஜமாஅத்திற்கு அங்கு பள்ளிவாசல் கட்டம் பாக்கியம் கிடைத்தது. மேலும் 13 மீட்டம் உயரமுள்ள இரண்டு மினாராக்களும் அந்த பள்ளிவாசலில் உள்ளது. மிக அழகிய பள்ளிவாசலாகும். மேலும் 375 பேர் அங்கு தொழ முடியும்.

அடுத்து அல்லாஹ் கனவுகளின் மூலமாக எவ்வாறு நேர்வழி காட்டுகின்றான். ஐவேரி கோஸ்ட் நாட்டின் சான் பைதரோ என்ற ஒரு ரீஜன் உள்ளது. அதன் ஒரு நகரத்தில் கனவின் மூலமாக கூ நாம் அஹ்மது என்ற பெயருடைய ஒரு நபர் கனவின்

மூலமாக பைஅத் செய்தார். அன்னார் கிருத்தவ மதத்தை சார்ந்தவராக இருந்தார். ஆனால் பின்னர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு வஹாபி பிரிவில் இணைந்தார். அவர் கூறுகின்றார். இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு நான் தொழுகையை கற்றுக் கொண்டேன். தொடர்ந்து பள்ளிவாசலுக்கு சென்று தொழுது வந்தேன். அந்நிலையில் நான் கனவில் இரண்டு முறை ஒரு பெரியவரைக் கண்டேன். முதல் முறையிலேயே இந்த நபர் இறைவனின் நபி ஆவார் என்பதைக் கண்டு கொண்டேன். நான் ஒரு வேளை நபி (ஸல்) அவர்களை சந்தித்த நிகழ்வாக இருக்கலாம் என்று எண்ணினேன். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அதே பெரியவரை டி.வியில் வருவதை நான் கனவில் பார்த்தேன். யாரோ ஒருவர் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டும் இருக்கின்றார். அந்த டி.வி க்கு கீழே மிஷன் இஸ்லாமிக் அஹ்மதிய்யா என்று பிரஞ்சு மொழியில் எழுதப்பட்டிருந்தது. இந்த கனவிற்குப் பிறகு நான் பள்ளிவாசலின் இமாமிடம் அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி கேட்டேன். முதலில் இமாம் சாஹிப் அதனை கண்டு கொள்ளவில்லை. நான் மீண்டும் மீண்டும் கேட்ட போது அவர் கூறினார். அஹ்மதிகளாகிய அந்த மக்கள் முஸ்லிம்கள் கிடையாது. உனக்கு என்ன ஆயிற்று. உன்னை யார் வழிகெடுத்தது என்று கேட்டார். நீ ஏன் இஸ்லாத்தை அழிப்பதற்கு துடிக்கின்றாய் என்று அந்த இமாம் கூறினார். எந்த நகரத்தில் அந்த நபர் இருந்தாரோ அங்கு நமது ஜமாஅத் கிடையாது. அவர் மவ்லவிக்கு பதில் கொடுத்தார். என்னை யாரும் குழப்பவில்லை. நான் இதுவரை ஒரு அஹ்மதியை கூட சந்திக்கவில்லையே ? எனக்கு இறைவனே அஹ்மதிய்யத்தின் பாதையை காட்டித் தந்துள்ளான் என்று பதில் அளித்தார். வீட்டிற்கு வந்த பிறகு அவருக்கு கவலை மேலும் அதிகமானது. இந்த அஹ்மதிகள் யார் ? இமாம் சாஹிப் ஏன் அவர்களை காஃபிர் என்று கூறுகின்றார் ? என்ற கேள்வி எழுந்தது.

அவர் கூறுகின்றார். இதற்காக நான் அல்லாஹ்விடத்தில் துஆ செய்தேன். இறைவா ! நீயே எனக்கு நேர்வழியை காட்டுவாயாக. நான் எனது சுற்று வட்டாரத்தில் அஹ்மதிகளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தேன். எனக்கு தொடர்பு கொள்வதற்கான வழிவகை கிடைக்கவில்லை. ஒரு நாள் ஒரு நண்பர் கூறினார். தல்வா என்ற ஊரில் அஹ்மதிய்யா ஜமாஅத் உள்ளது. இவ்வாறு நான் மக்களிடம் விசாரித்து விசாரித்து ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸை சென்றடைந்தேன். அங்கு மிஷனரி சாஹிப் எனக்கு ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகத்தை கூறினார்கள். அந்த மிஷன் ஹவுஸில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்து ஆச்சரியத்திற்குள்ளானேன். நான் விசாரித்த போது இவர் தான் இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) என்று கூறினார். நான் உடனே பைஅத் செய்து விட்டேன். இந்த பெரியவரைத் தான் நான் கனவில் இருமுறை பார்த்தேன் என்று மிஷனரி சாஹிபிடம் அவர் கூறினார். மேலும் பைஅத் படிவத்தை இப்போது தான் நான் பூர்த்தி செய்துள்ளேன். ஆனால் என்று நான் கனவு பார்த்தேனோ அன்றே நான் அஹ்மதியாகி விட்டேன் என்று கூறினார்.

அடுத்து, பெல்ஜியத்திலிருந்து முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகின்றார். பெல்ஜியம் ஜமாஅத்தில் புதிய அஹ்மதியான இத்ரீஸ் சாஹிப் என்பவர் கனவில் ஒரு பெரியவரைக் கண்டார். முதலில் ஆப்ரிக்காவில் நடந்த சம்பவம் கூறப்பட்டது. தற்போது ஐரோப்பாவில் நடந்த சம்பவமாகும். எவ்வாறு அல்லாஹ் வழிகாட்டுகின்றான் என்று பாருங்கள். அல்லாஹ் ஆதிக்கம் எல்லா இடத்திலும் இருக்கின்றது.

முபல்லிக் சாஹிப் கூறுகின்றார். அந்த புதிய அஹ்மதி கனவு பார்த்த போது ஜமாஅத்தை பற்றி எதுவும் அறியாதவராக இருந்தார். பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வீட்டில் அமர்ந்து பல்வேறு சேனல்களை மாற்றிக் கொண்டு இருந்தார். திடீரென அவரது பார்வை M.T.A அல் அரபியா மீது பட்டது. அன்னார் M.T.A ல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படத்தை பார்த்த போது அவருக்கு தனது கனவு நியாபகத்திற்கு வந்தது. நான் கனவில் இந்த பெரியவரைத் தானே பார்த்தேன் என்று கூறி தொடர்ந்து M.T.A பார்க்க தொடங்கினார். இவ்வாறு அவரது உள்ளம் அஹ்மதிய்யத்தின் பக்கம் சாய்ந்தது. அதற்குப் பிறகு அவரே முயற்சி செய்து பெல்ஜியம் ஜமாஅத்தின் முகவரியை தேடினார். ஒரு வழியாக மிஷன் ஹவுஸ் வந்தடைந்தார். நான் பைஅத் செய்வதற்காக வந்துள்ளேன் என்று கூறினார். முதலில் ஜமாஅத்தைப் பற்றி கொஞ்சம் படித்துக் கொள்ளுங்களேன் என்று அங்குள்ள முரப்பி சாஹிப் அவர்கள் கூறினார். இன்றும் பல விஷயங்களை அறிந்து கொண்டு பின்னர் பைஅத் செய்யுங்கள் என்று அவரிடம் கூறினார். அதற்கு அவர், எனக்கு என்னுடைய அனைத்து கேள்விகளுக்குமான பதில்கள் கிடைத்து விட்டன என்று கூறினார். இவ்வாறு பல தப்லீக் விஷயங்கள் பற்றி பேசப்பட்டது. ஆனால் ஒவ்வொரு விஷயத்திலும் அவரே விளக்கமும் கொடுத்தார். எனது உள்ளம் எப்போதோ அஹ்மதிய்யத்தில் மன நிறைவு அடைந்து விட்டது என்று கூறினார். மேலும், அவர் பைஅத்தும் செய்தார்.

இப்போது பாருங்கள். நான் கூறியது போன்று ஆஃப்ரிக்காவிலுள்ள தொலைதூர நாட்டின் மக்களின் உள்ளத்தை திறந்து தருகின்றான் என்றால் ஐரோப்பிய மக்களின் உள்ளங்களையும் திறக்கின்றான்.

அவர் தனது சொற்பொழிவில் கூறினார். நான் பெற்றோர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் குழந்தைகளை கண்டிப்பாக பள்ளிவாசலுக்கு அனுப்பி வையுங்கள்.

இந்தியாவில் கர்நாடக் மாநிலம் யாத்கீர் ஜமாஅத்தின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்: கடந்த வருடம் இங்கு அஹ்மதியல்லாத நபர்களால் பெரிய எதிர்ப்பு ஏற்பட்டது. எதிரிகள் வெளியிலிருந்து தமது உல்மாக்களை அழைத்து வந்து கூட்டத்தை நடத்தினர். இந்தியா மற்றும் பாகிஸ்தானில் ஜமாஅத்திற்கான எதிர்ப்பு உச்சத்தை எட்டியுள்ளது. அவர் கூறுகின்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது மிகவும் அசுத்தமான தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. ஜமாஅத்திற்கு எதிராக மக்கள் தூண்டி விடப்பட்டனர். சில அறிவற்ற மக்கள் ஜமாஅத் உறுப்பினர்களோடு மிகக் கீழ்த்தரமாக நடந்து கொண்டனர். ஜமாஅத்திற்கு எதிராக பிரசுரங்கள் வெளியிட்டனர். அந்த நாட்களில் ஜமாஅத்தை சார்ந்த ஒரு நபர்

ஜமாஅத்தின் தொடர்பிலிருந்து விலகி இருந்து வந்தார். அவர் எந்நிலையிலும் ஜமாஅத்தோடு தொடர்பு வைக்க விரும்பவில்லை. அவருடைய துரதிஷ்டம் அவர் துண்டிக்கப்பட்டிருந்தார். எப்படியோ அவரை எதிரிகள் அச்சமூட்டியும், பேராசை காட்டியும் தன்னுடன் சேர்த்துக் கொண்டனர். அவருக்கு மாலையிட்டு முழு நகரத்திலும் கூச்சலிட்டனர். நாங்கள் ஒரு காதியானி கர்ஃபிரை முஸ்லிமாக்கி விட்டோம் என்று மார்தட்டிக் கொண்டனர். பத்திரிகைகளில் பல தவறான செய்திகள் வெளியிடப்பட்டன. அந்த நபரின் மூலமாக ஜமாஅத்திற்கு பெரிய எதிர்ப்பு செய்யப்பட்டது. அந்த நபரும் ஜமாஅத்திற்கு எதிராக அநாகரிகமாக பேசினார். இந்த விஷயம் தொடர்பாக அவரிடம் ஜமாஅத் தொடர்பு கொண்டது. உனக்கு என்ன பிரச்சனை ? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர் எனது பெயரில் பத்திரிகையில் வெளியான விஷயங்கள் நான் கூறியதில்லை. எனக்கு சில நிர்பந்தங்கள் உள்ளன. அதை என்னால் கூற முடியாது. அதன் காரணமாக நான் இவர்களுடன் சேர்ந்துள்ளேன் என்று கூறினார். ஒரு வருடம் தான் கழிந்திருந்தது. அந்த நபர் அல்லாஹ்வின் தண்டனையால் பிடிக்கப்பட்டார். அவர் நல்ல ஆரோக்கியமான மனிதராக இருந்தார். திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்தார். ஒரு பக்கம் கை, கால் முழுவதும் பக்க வாதம் ஏற்பட்டு செயலிழந்தது. அஹ்மதியல்லாதவர்கள் அவருக்கு எந்த உதவியும் செய்யவில்லை. நம்முடைய குத்தாம்கள் தான் அவருக்கு அந்த நேரத்திலும் உதவி செய்தனர். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று வந்தனர். இனி இவர் உயிருடன் இருப்பது கடினம் என்று மருத்துவர்கள் கூறினர். இறுதியில் தனது முடிவை அடைந்தார். அவரது மகனோ பற்றுள்ள அஹ்மதி ஆவார். அவரது மகனின் மீதும் அஹ்மதியல்லாதவர்கள் அதிகமான அழுத்தம் கொடுத்தனர். ஆனால் அவர் உறுதிப்பாட்டுடன் இருக்கின்றார். எந்த அளவுக்கு என்னால் அவர் தனது தந்தையின் ஜனாஸாவை கூட தொழவில்லை. அல்லாஹ் அவருக்கும் ஈமானில் உறுதிப்பாட்டை தருவானாக.

அல்லாஹ்வின் அருட்கொடை கொண்ட சில சம்பவங்களை நான் எடுத்து வைத்துள்ளேன். இன்னும் ஏராளமான சம்பவங்கள் இருக்கின்றன. நாம் எப்போதும் அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பவர்களாக திகழ்வோமாக. மேலும் அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்கக்கூடியவர்களாக இருப்போமாக. அல்லாஹ் நமக்கு அஹ்மதிய்யத்தில் இணையக்கூடிய பாக்கியத்தை வழங்கியுள்ளான். அதில் நமக்கு அல்லாஹ் உறுதிப்பாட்டையும் வழங்குவானாக. நமது ஈமானில் நம்மை முன்னேறச் செய்வானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh, London – on 26.08.2016
Tamil Translation : Maulavi A. ABDUR RAHMAN Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516